| Case No. **O.S.No.919/2020** | **D.W.1:** துபைல் அகமது | Date:24.09.2024 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the 24th September 2024.

## குறுக்கு விசாரணை ( பிரதிவாதிகள் தரப்பில்)

இந்த வழக்கில் 1ஆம் பிரதிவாதி என் தகப்பனாருடைய தங்கச்சி. 2ஆம் பிரதிவாதி என் அப்பாவின் கூட பிறந்த தம்பி. என் தாத்தாபெயர் ஷேக் முகமது. என் பாட்டியின் பெயர் சையது ராபியா. என் தந்தை அவரது பெற்றோர்களுக்கு மூத்தபிள்ளை. என் தாத்தாவும் அவருடன் கூட பிறந்த தம்பியும் சேர்ந்து எல்.கே.எஸ் ஜீவல்லர்ஸ் என்ற பெயரில் கூட்டு குடும்ப வியாபாரம் சொய்து வந்தனர் என்றால் சரிதான். எனது தாத்தா கடந்த 30.10.1990 இறந்த போனார் என்றால் தேதி நினைவில் இல்லை. என் தாத்தா இறந்த பின்னர் என் தகப்பனாரும் இவ்வழக்கில் உள்ள 2ஆம் பிரதிவாதியும் அந்த கூட்டு குடும்ப வியாபரத்தை நடத்தி வந்தனர் என்றால் சரிதான். என் தந்தை குடும்பத்தில் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் குடும்பத்தினை நடத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. இது தவிற என் தந்தை வேறு ஏதேனும் தொழிலை நடத்தி வந்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. எனது பிறந்த தேதி 31.08.1996 ஆகும். 1987 காலகட்டத்தில் என்

தகப்பனாருக்கு கூட்டு குடும்ப வியாபாரத்தை தவிற வேறு எந்த தொழிலும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் தந்தை கடந்த 2020 ஆம் ஆண்டு இறந்து போனார். என் தகப்பனாரின் மறைவுக்கு பின்னர் நான் 2ஆம் பிரதிவாதியுடன் இனைந்து கூட்டு குடும்ப வியாபாரத்தை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய பெற்றோர்களான வாதிகள் தா.வா சொத்தில் தரைதளைத்தை கொடுத்து 1 ஆம் பிரதிவாதியான என்னுடைய அத்தைக்கு எதிரான வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். தா.வா சொத்து என் பெற்றோர்களுக்கு தான் பார்த்தியபட்டது என் 24.02.1987 வருட விற்பனை கிரைய ஆவனம் மற்றும் 17.04.2009 தேதியிட்ட செட்டில்மண்ட் பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் என் பெற்றோர்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 16.09.2012ல் அன்று பிரதிவாதிகள் தா.வா.சொத்து மற்றும் இதரசொத்தக்களை பொறுத்து பாக பிரிவினை கேட்டு வக்கில் நோட்டிஸ் அனுப்பினார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. கடந்த 13.02.2023 ல் நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அறிந்து தான் நான் நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தா.வா சொத்து உட்பட இதர சொத்துகளில் கூட்டு குடம்ப சொத்து என்ற அடிப்படையில் பாக பிரிவினை கேட்டு பிரதிவாதிகள் சி.எஸ்.123/2013 என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான்.

தாவா,சொத்து என் பெற்றோர்களுக்கு பாத்தியபட்டது என்பதை காட்டக்கூடிய வகையில் ஆவணங்களை தாக்கல் செய்யாத நிலையிலும் முந்தைய வழக்கான சி.எஸ்123/2013 நிலுவையில் உள்ள நிலையிலும் என் பெற்றோர்கள் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு எந்த வகையிலும் நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கின் வாதிகளாகிய என் பெற்றோர்கள் ஏற்கனவே நிலுவையில் இருக்கும் சி.எஸ்123/2013 என்ற வழக்கின் விவரங்களை இவ்வழக்கில் காட்டவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. என் தந்தைக்கு ஏற்கனவே சி.எஸ்123/2013 என்ற வழக்கு நிலுவையில் இருப்பது நன்றாக தெரியும் என்றும் அது போலவே எனக்கும் அந்த விஷயம் நன்றாக தெரியும் என்றும் வேண்டும்என்றே அதனை இவ்வழக்கின் பிராதிலும் எனது நிருவண வாக்குமூலத்திலும் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது பெற்றோர்களும் கதவு எண்.172/114டீ, தீவு தெரு காயல்பட்டினம் தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியல் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது பாட்டி ராபியா என்பவர் இவ்வழக்கின் 1ஆம் பிரதிவாதியான எனது அத்தையும் என் அப்பாவின் தங்கச்சியுமான எஸ்.எம் ஷாகிரா என்பவர் வீட்டில் வசிக்கிறார் என்றால் சரியல்ல என் அத்தைதான் என் பாட்டி வீட்டில் பாட்டியோடு இருந்தார்கள். நான் கூறுவது தவறு என்றும் முதல் பிரதிவாதி வழக்கு சொத்தின் உரிமையாளராக தன் தாயாரை கவனித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. வாதிகளான என்

பெற்றோர்களுக்கும் பிரதிவாதிகாளன என் அத்தை மற்றும் சித்தாப்பாவிற்கும் இடையில் நடைபெற்ற வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்புகளை மறைக்கும் உண்மையை மறைத்து ஜொடித்து இவ்வழக்கு தாக்கல் பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மைனராக இருந்த காலத்தில் என் பெற்றோர்களுக்கும் பிரதிவாதிகளுக்குமிடையே நடந்த சமாச்சாரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் என் பாட்டி எனது அத்தை நோட்டிஸ் அனுப்பிய விவரங்களை தன் கூட இருந்தும் கூட தனக்கு தெரிவிக்கவில்லை என்பதாக என்னிடம் சொல்லிஇருக்கிறார். ஆனால் நேரடியாக தெரியாது. இந்த விவரங்களை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா. சொத்தில் இருந்து மத்திய வரும்படி ரூபாய் 30,000/- வருகிறது என்பதை காட்ட ஆவனம் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரமோ வழக்குமூலமே கிடையாது என்றும் அதனால் இவ்வழக்கு தள்ளுபடிக்குறியது என்றால் சரியல்ல. என் பாட்டியை பராமாரிக்க 1 ஆம் பிரதிவாதி வாதிகளான எனது பெற்றோர்களிடம் மாதம் ரூபாய் 3000/- பெற்றதாக பிராதில் சொல்லிருப்பது தவறானது என்றால் சரியல்ல. நான் கேள்விபட்டிருக்கிறேன். என் பெற்றோர்கள் அவ்வாறாக 1 ஆம் பிரதிவாதிக்கு மாதம் ரூபாய் 3000/- கொடுத்ததாக சொல்லிருப்பதை

நிறுபிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடிக்குறியது என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct

V PANDIARAJ

Digitally signed by V PANDIARAJ
Date: 2024.09.24 18:29:55 +0530

Dt:24.09.2024 IV Additional Judge.